Registered as a News Paper in Ceylon
P M G No. B A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத் - சுஉ] யாழ்ப்பாணம்:- கரவரு ஆடிமீ உஉ வ செவ்வாய்க்கிழமை (7 ஆகஸ்ட் 1951) [இல் - ௩௪]

## உ தோத்திரம்

கதியேதுமின்றி யுணைவந்தடைந்த கடன்ஞாலமீது பிறரை
மதியேனைமூடும் இருளாத்துரக்கில் வசமாய்மறித்து வருமோ
துதியேதுமின்றி நீரிற்பிரிந்த தோயிற்குழம்ப தலவோ
நதியேடடர்ந்த புகழ்மேவு கூடல் நகர்வாழுஞான முதலே.

வைவையாற்றின்கண்ணே தமிழ்மறை வரைந்த திருவேட்டினை எதிரேறச் செய்தருளிய (மங்காப்) புகழோடு கூடிய கூடலாலவாய் எனப்படும் மதுரைப்பதியிற் கோயில்கொண்டருளிய ஞானத் தலைவராகிய சொக்கலிங்கப் பெருமானே! தஞ்சம் வேறு யாதுமின்றித் தேவரீரே தஞ்சமென்று நம்பிவந்து புகுந்தேனும், கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே வேறு எந்தெய்வத்தையும் பொருட்படுத்தாதேனுமாகிய அடியேனைப் பற்றியுள்ள அஞ்ஞானவிருளை அகற்றிவிடில் அது மீண்டு தானாக என்னைப் பற்றிக்கமுடியுமோ? (முடியாது); தேவரீரை எவ்வாற்றானுந் துதித்தறியேன் நீரிலிருந்து பிரிக்கப்பெற்ற(உலர்ந்த)கலவைச் சாந்தின் நிலைமையையடைந்தேன் என்பது பொருள்.

நீர் செறிந்த கலவைச் சாந்தன்றி நீர்வற்றிய கலவைச் சாந்து பயன் படாதவாறு அடியேனும் தேவரீருடைய அருள் நீர்மையின்மையாற் பயனற்றவனுனேன் என்றபடி. தொய்யிற்குழம்பு - கலவைச் சாந்து. (96)

## சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை
### விசேட விழா

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில், சுந்தரமூர்த்தி நாயனரின் குருபூசைத் தினமாகிய வருகிற வியாழக்கிழமை (9-8-51) பகல் ஒன்பதரை மணிவரையில் ஷை சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நால்வர்பூசை புராண படனம் (வெள்ளானைச் சருக்கம்) மகேசுவர பூசை முதலியன நடைபெறுமெனவும், அன்று இரவு 6 மணி தொடக்கம் நால்வர் திருவுருவப்படம் சைவத் திருமுறைகளென்னுமிவை விமானத்தில் வைத்துத் தெருவீதி வலம் மேளவாத்திய சகிதமாக எழுந்தருளச் செய்யப்படுமெனவும், அதன்பின் சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திரம், திரு. த. குமாரசுவாமிப் பிள்ளையால் கதாப்பிரசங்கமாகச் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப் படலாயிற்று.

## காலநிலை

சென்ற பங்குனி மாசத்தின் பின் இங்குப் பெருமழை பெய்யாமையினுல், மாஞ்செடிகள் வாட்டத் தலைப்பட்டன; குளங்கள் வற்றலாயின; வயல்களில் ஈரத்தன்மை யின்மையால், அவற்றை உழுதல், கொத்துதல், எருவிடுதல், பண்படுத்துதல் முடியாமலிருக்கிறதென விவசாயிகள் கவலைப்படுகின்றனர்; இடையிடையே குளிரோடு கூடிய கடுங்காற்று வீசுகின்றது; ஊரிலே பலவகை நோய் பரவியுள்ளன; ஆவணி மாசமழையை எவரும் எதிர்பார்த்த வண்ணமிருக்கிருர்களெனலாம்.

## பிரசங்கம்

சென்ற வெள்ளிக்கிழமை(3-8-51) மாலை 6 மணிதொடக்கம், கொழும்பு புத்துறை வதரிபீட விநாயகர் (இலங்கைதகுளத்திற் பிள்ளையார்) கோவில மண்டபத்தில், மேற்படியூர்ச் சைவ மாணவர் சிவபூசைச் சங்கத்தாரின் ஐந்தாம் ஆண்டுப் பூர்த்திவிழாப் போது, குறித்த சங்கத்தாரின் வேண்டுகோட்கிசைந்து திரு. த. குமாரசுவாமிபபிள்ளை "உடலும் பயனும்" என்னும் விஷயமாகவும், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை "கந்தபுராண மகிமை" என்னும் விஷயமாகவும், ...... ச அமிர்தாம்பிகை "யாழ்ப்பாணத்திற் சைவத்தை வளர்த்த பெரியார்கள்" என்னும் பொருள்பற்றியும் சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள். பல நூற்றுக்கணக்கானேர் ஆண்கள் பெண்கள் மாணவர்கள் அச்சமயத்தில் வந்திருந்து பிரசங்கங்களை விருப்புடன் கேட்டனர்.

## "சிறந்த சொற்பொழிவு"
### கடவுளைச் சிந்தியாத மக்கள் விலங்குகளுக்குச் சரி
### சைவப்பிரசங்கமும் சமயதீட்சையும்

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்தில 28-7-51 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சுந்தரர் குருபூசைத் திருநாள் இந்து வாலிபசங்க ஆதரவில் நிகழ்ந்தது. அத்தருணம் மகா வித்துவான K ஆறுமுகநாவலர், "சுந்தரர் செந்தமிழ்" என்பதுபற்றிச் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் பேசுகையில் முக்கியமாகக் குறிப்பிட்டதாவது: "மனிதன் அறிய வேண்டிய முக்கியமான மூன்று பொருள் பசு, பதி, பாசம் என்பன; உயிர் இந்த உடம்பை எடுக்கவில்லை. உடம்பும் இந்த உயிரை எடுக்கவில்லை. இவற்றிற்கு மேலான சக்தி ஒன்று உண்டு. அதுவே ஆண்டவன். எல்லா உயிர்களும் நித்தியமானவை; அவைகள் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கவாறு இறைவன வாழ்வை அளிக்கின்றர். அத்தகைய ஆண்டவனைச் சிந்தியாத மக்கள் விலங்குகளுக்குச் சரி" என்பதாம.

வீரவ கல்லூர் சுந்தர ஓதுவாமூர்த்திகளால் திருப்பதிகம் இசையுடன் ஓதப்பட்டது. 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பல அன்பர்கள் சமயதீட்சை பெற்றுக்கொண்டனர்.

—கடித.

## உருழைக்கிழங்கு கடலில் வீசப்பட்டது

கேப்பின்ஸ் என்னுமிடத்திலிருந்து இலங்கைக்கென ஏற்றுமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் தொகை 1300 தொனுகும்; ஆனல் குறித்த கப்பல் கொழும்புத்துறை முகத்தில் வந்து சேர்ந்தபோது அவைகளுள் 600 தொன் நிறை கொண்ட கிழங்கு பழுதுகெட்டுப் போனமையினுற் கடலில்வீசப்பட, 700 தொன் கிழங்கே சென்றவாரம் இறக்குமதிசெய்யப்பட்டதாம்.

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை கட்டட நிதிக்கு நன்கொடை



ஷை பாடசாலையின் கட்டடநிதிக்கு வாலாஜாபாத் அரிசி ஆலை உரிமையாளர் திரு. கோ. திருமலைசாமி முதலியார் அவர்கள் ரூ 1000 ஆயிரம் நன்கொடை அளித்தார்கள். அப் பெருந்தகையாருக்குப் பாடசாலை நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது.

சைதாப்பேட்டை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு குடிமைப் பயிற்சி வகுப்பு வாலாஜாபாத்தில் தொடங்கிய பிறகு பாடசாலையைப் பார்வையிடும்போது எடுத்த படம இடமிருந்து வலமாகக் கல்லூரி பிரின்ஸிபால் வி ஆர் ஆரோக்கியநாத முதலியார், இந்துமத பாடசாலைத் தலைவர் வா. கி. மாசிலாமணி முதலியார், சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சஞ்சீவி பிள்ளை, கல்வித்துறை டிப்டிடைரக்டர் பால, பயிற்சித்தலைவர் டி. டி. தீனதயாளு, கல்லூரி மாணவர்கள் தலைவர் திரு காஸிம் ஆகியோர்கள் காணப்படுகிருர்கள.

## ஊர்காவற்றுறையில் தண்ணீர்ப் பஞ்சம்

அடுத்தர் சில மாசங்களாக மழையில்லாமையினுல் ஊர்காவற்றுறைப் பகுதியில் வசிக்கும் மக்களும் குடித்தற்குச் சமைத்தற்குமாகிய நல்ல தண்ணீர்ப் பஞ்சம நேரலாயிற்று; குளம் கூவல் முதலிய நீர்நிலைகளிலும் தண்ணீர் வற்றத் தலைப்பட்டமையினுல மக்கள் குளிக்க முழுகவும மாடு முதலாம் மிருகங்கள் குடிக்கவும் தண்ணீரிலாது போகின்றதாம். ஏகாலியரும் துணி வெளுத்தற்குத் தண்ணீரில்லாமையால் இடர்ப்படுகின்றனராம்.

## பரிசுத்த புராதன பட்டினத்திற் கட் சாராய விருத்தி

புராதன அயநகரமாகிய அநுராதபுரத்தில் சென்ற ஆண்டிற் களளுக்கடை மூலமாக வந்த அரசிறை வருவாய் 102862 ரூபா; இந்த ஆண்டில் 126850 ரூபா; இப்படியே சாராயத் தவறணைவாயிலாகவும் முன்திய ஆண்டில் 91860 ரூபாவும் அடுத்த ஆண்டில் 113769 ரூபாவும் அரசிறை வருவாயாகக் கிடைத்தனவாம்.

## வைத்தியசாலையிற் கிடந்த மனைவியைச் சாகக் குத்தி, தானும உயிர் விடத் துணிந்தானும்

எட்டியாந்தோட்டைக் கிராமச் சங்கத்திலே கூலி வேலை செய்பூ சுவாமு என்பவன் தன் மனைவியாள் சுகவீனமாகக் கனவரிலா ஆகினர் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்றுக் கொண்டு கிடக்கும்போது, ஏதோ அவன்மேற் சந்தேகப்பட்டுப்பிணக்குற்று அவளைக் கத்தியாற் குற்றிச் சாகக்கொண்டுவிட்டுத் தானும் உடனே கத்தியாலே தன்னைக் குற்றித் தன்னுயிர் மாய்க்கத் துணிந்தானும்; அவன இப்பொழுது ஆபத்தான நிலைமையிற் கிடக்கின்றனும.

## அரிசி, கோதுமைமா, சீனி 1 வருடத்திற்கு விலையேருவாம்

இன்னும் பன்னிரண்டுமாசகாலத்திற்கு, கூப்பன் அரிசி பறைவெட்டிய படியொன்று 25 சதவிகிதமாகவும், கொலநிக அரிசி ஒரு படி 68 சதவிகிதமாகவும் கோதுமை மா றாத்தலொன்று 23 சதமாகவும், சீனி ஒரு றாத்தல 48 சதமாகவும் விற்கப்படுதற்காகிய ஒழுங்குகளை அதிகாரிகள செய்வதாக லேக். ஒலிவர் குணத்திலகா தெரிவிக்கின்றர்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ், கர ஹூ ஆடி மீ உஉ உ செவ்வாய்க்கிழமை


## கோயில்வழிபாடு செய்வோர்க்காகிய சௌகரியங்கள்

நல்வழியி லொழுக விரும்பும் மக்களுக்கு விசேடமாக வுள்ள பணி ஆலய வழிபாடெனலாம்; அவர்கள் வீட்டிலிருந்து தெய்வத்தை வழிபடுவதைக் காட்டிலும் ஆலயத்திற்குப் போய்க் கடவுளை வழிபடவே அதிகம் விரும்புவர்; மனவொடுக்கத்திற்கு இல்லத்தைக் காட்டிலும் வேறு எந்த இடத்தைக் காட்டிலும் ஆலயமே சிறந்த இடமாகு மென்பது எச்சமயவாதிகட்கும் ஒத்த கொள்கையாகும். "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்று எங்கள் ஔவைப்பிராட்டி அந்தக் காலத்திற் சொன்னதும் இக்கொள்கையை யுத்தேசித்தேயாகும். இதனாற்றான் எச்சமய வாதிகளும் இயன்ற வரையிலே தூயராய், தினந்தோறுஞ் செல்லாவிட்டாலும், விசேட காலங்களிலே தத்தஞ் சமயத்திற்குரிய தெய்வத்தை வழிபடும் வண்ணம் கோயிலுக்குப் போகிறார்களெனலாம்.

அன்பர்கள் இறைவனை வழிபடும் வண்ணம் ஆசார சீலராய் ஆர்வத்தோடு செல்லுதற்கான தானமாகிய திருக் கோயில்களும் தூயமுறையிலே, சுத்தமான வகையிலே, வழிபாடு செய்யச் செல்வோர்க்காகிய சௌகரியங்களோ டமைந்தனவாய் இருத்தல்வேண்டும்; இந்த வகையிற் பௌத்த ஆலயங்கள், கிறீஸ்தவ கோயில்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்க ளென்னுமிவைகள் இயன்ற வரையில் ஆங்காங்கு வழிபடச் செல்வோரின் சௌகரியங்களை யுத்தேசித்து, அவ்வக் கோயில்களுக்குரிய அதிகாரிகளால் அமைத்து நடத்தப்படுகின்றன வெனலாம். ஆனாற் சைவமக்களாகிய நாங்கள் வழிபடுந் திருக்கோயில்களுட் சிலவினுஞ் சிலவேயொழியப் பல கோயில்கள் அங்ஙனமில்லாமலும் சுகாதாரத்திற்கு மாறாகவுங் காணக்கிடத்தல் சைவமக்களெல்லார்க்குந் தீராத் துயரந் தருவதாகும்; வழிபடுவோர் சௌகரியத்தை யுத்தேசித்து நடைபெறுங் கோயில்களுக்கு உதாரணமெடுத்துக் காட்டப்புகின் நல்லூர்க் கந்தசுவாமி கோயில், தொண்டமானாற்றிலுள்ள செல்வச் சந்நிதி போன்ற சிலவினுஞ் சில கோயில்களை யெடுத்துச் சொல்லலாம். இக்கோயில்கள் வழிபடச் செல்வோர் ஸ்நானஞ்செய்ய, முகங் கால் கை சுத்தி செய்தற்காகிய கேணிகள் கிணறுகளோடும், மழை வெயிற்போது தங்கியிருத்தற்காகிய திருமடங்களோடும் இன்னபிற சௌகரியங்களோடும் அமைந்துள்ளன வெனலாம்; ஆயிரக் கணக்கான மக்கள் விசேட காலங்களில் இத்தலங்களுக்குச் செல்லினும், அவர்க ளெல்லார்க்கு முரிய சௌகரியங்கள் இக் கோயில்களி லுண்டென்பதைப் பலரறிவர்; இவை மாத்திரமல்லாமல் வடமராட்சிப் பகுதியி லுள்ள கோயில்களிலெல்லாம் வழிபடுவார்க்காகிய சௌகரியங்களாகிய திருக்குளம் கூபம் திருமடமென்னு மிவற்றோடு கூடியனவாய், சுத்தமான முறையில் அமைந்தனவா யிருத்தலைக் காணலாம்.

இப்படியான சௌகரியங்கள் இல்லாக் கோயில்களுள், புராதன புண்ணிய க்ஷேத்திரமாகிய மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலை உதாரணமாகக் காட்டலாம்; இங்கே பல்லாயிரக் கணக்கான மக்கள் மகோற்சவ காலத்தில் விசேடமாகத் தேர் தீர்த்த உற்சவ காலத்தில் தரிசனஞ் செய்யும்படி போதல் உலகப் பிரசித்தம; ஆனால் இத்தலத்தில் இத்துணைப் பெருந் தொகையான அன்பர்கள் கால் கை சுத்தி செய்வதற்காகிய இரண்டு கிணறுகள் காணப்படுகின்றனவேயொழிய, இதற் குபயோகப்படக் கூடிய திருக்கேணி யில்லை யெனலாம் இதனால் அன்பர்கள் படுங் கஷ்டஞ் சிறிதல்ல. திருக்கேணிகள் இத்தலத்தில் கிழக்கிலும் மேற்கிலுமாக இரண்டுள்ளன; ஆனால் அவை பாழடைந்து கிடக்கின்றன; அவற்றி லிறங்குதற்கு எவருமஞ்சுவர்; பெருமவருவாய் பெறும் இக்கோயி லதிகாரிகள் குறித்த திருக்கேணிகளிரண்டினையும் சுத்தமான முறையில் வைத்திருக்க வொண்ணாதா? இனி, இத் திருக்கோயிலின் வீதிகள் மூன்றுங் கிடக்கும் அசுத்தமான தன்மை அங்கு வழிபடச் செல்வோரினுள்ளத்தைப் புண்படுத்துவதாகுமல்லவா? இக்கோயி லதிகாரிகள் இனியேனும் இதனைச் சிந்திப்பார்களா? இப்படியான சில கோயில்கள இன்னுமுண்டு; சமயம் வாய்க்குந்தோறும் எடுத்துக் காட்டுவேம்.

## பரிதாப மரணம்

நேற்று (6-8-51) மாலை, ஆனைக்கோட்டையிலுள்ள கரையடைப்பிட்டி யென்னும் மணற்றிடலில், லொறியைக்கொண்டுபோய்விட்டுக்கொண்டு சின்னையா மார்க்கண்டு, நாகரத்தினம் கனகலிங்க மென்னுமிருவரும் மணல் தோண்டி ஏற்றும்போது, மேலுள்ள திடர் சரிந்து விழ, அதில் இருவரும் அகப்பட்டு ஒருவர் உடனேயிறந்து போக, கனகலிங்கம் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டபோது இறந்தனர். இவர்கள் சகோதரமுறை பூண்டவர்களாம்.

# உலகம்பலவிதக்கதை

( முற்றொடர் 15 )

"பொருளிலார்க்கின்பமில்லை"

இப்படியெல்லாந் தமயன் சொல்லச் சாவதானமாகக்கேட்டுக்கொண்டிருந்த தங்கை சற்று நேரம் யோசித்தபடியிருந்துவிட்டுப் பின்னர்ப் பத்மநாதனைப் பார்த்து "அண்ணா கேட்கிறேனென்று குறைநினையாதீர்கள்; இப்பொழுது நீங்கள் என்னை வனசாவைப் புறக்கணித்து, பாதாவைக் கல்யாணஞ்செய்யவேண்டுமென்று சொல்லும் நியாயம், வனசாவை மணந்தால் வாழ்க்கையிற் பெருஞ் செலவுண்டாகும்; கடன்காரனாகவேண்டி நேரும்; பாதாவை மணந்தாற் கடனின்றிச் சௌரவமாகச் சீவிக்கலாம். ஏனென்றால் உங்களைத் தவிர அவள் தானுந் தன் பொறுப்பிற் பணத்தையுழைப்பவள் என்பதுதானே? அது சரிதான், ஆனால் தன முயற்சியால், தன் கல்வியறிவாற் பணமீட்டுமாறு, தானே பணத்தையீட்டித் தானே தனக்காகிய செலவுகளைச்செய்பவளானால், பணவிஷயமாக, இல்லையேல் தனக்கு ஏதும் பொருள வரக்கும் விஷயமாக அவள் உங்களை எதிர்பார்க்க வேண்டிய தில்லையே; உங்களை நம்பியிருக்க வேண்டியதில்லையே; பண விஷயத்தில், அதனைச் செலவிடும் விஷயத்தில் இல்லையேற் போற்றும் விஷயத்தில் உங்கள் எண்ணத்தையும் அவள்பெற வேண்டியதில்லையே; இப்படியெல்லாமிருந்தால் அதனால் உங்களுக்கு என்ன சுகம்? அண்ணா" என்று அறிவாள்போல் வினவினள் கமலாட்சி; 'சுகமென்ன என்று கேட்கின்றாய்? தங்காய்! என் மனைவியான பொருள் பண்டம் பணமுள்ளவளா யிருந்தால், அது எனக்கு ஒரு பெருமை, அவள் பொருட்டாக, என்பொருட்டாக, நான கடன்படவேண்டி நேரமாட்டாது; நானும் என் முயற்சியாற் பொருளீட்ட, அவளுந் தன் முயற்சியாற் பொருளீட்டினால எங்களுக்கு என்ன குறை நேரப்போகிறது! பொருளிலார்க்கின்பமில்லை, புண்ணியமில்லை, மருவிய கீர்த்தியில்லை, மாசறுட் பெருமையில்லை என்று பல சொல்லுவார்கள் ஆனாற் பொருளுள்ளவர்க்கு இவைகளெல்லாமுண்டுதாமே; தங்காய், பொருளினருமையை நீ உள்ளபடியுணர்ந்திலை; பொருள் படைத்தவர் இம்மையின் பயனை மாத்திரமல்ல மறுமையின் பயனையுந் தவறாது பெறுவரென்று பெரியோர் சொல்வார்கள்; இவைகளையெல்லாம உத்தேசித்தே சீதனத்தோடு கூடிய, இல்லையேல் நீதியான முறையிற் கௌரவமான வழியாற் பொருளீட்டக்கூடிய பெண் வேண்டுமென்கிறேன்" என்றான் பத்மநாதன.

"நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்; ஆனால், செல்வம் நிலையற்றது, தேகசுகம் எக்காலத்தும் இருப்பதல்ல, புருஷன் மனைவி யென்றிருக்கு மிருவருள் காலகேட்டால், ஒருவருக்கு நோயாக வேறேதும் இடைஞ்சலாக நேர்ந்துவிட, அதனால் அவர் பொருள வருவாய் குறைந்து வறுமையினாற் கஷ்டப்பட்டால், அவர் என்ன செய்வது?

பத்மநாதன்: புருஷன் கஷ்டப்பட்டால் மனைவி பொருளுதவி செய்ய வேண்டும்; மனைவி கஷ்டப்பட்டாற் புருஷனுதவி செய்வது தானே முறையாகும்.

கமலாட்சி: முறை யென்பதை நான் மறுக்கவில்லை அண்ணா ஆனால் ஒருவருக்கொருவர் கொடுத்துதவி செய்யாவிட்டாற் செய்வதென்ன?

பத்ம: எப்படிக் கொடுக்காமலிருக்க முடியும்? புருஷன் மனைவிக்கு ஆபத்து நேர்ந்தால் உதவத்தான் வேண்டும்; அப்படியே மனைவியுங் கணவனுக்கு உதவத்தானே வேண்டும், தங்கைச்சி.

கமலா: செய்தால் நல்லதண்ணா: ஆனாற் செய்யாத பட்சத்தில்?

பத்ம: செய்யாமலிருக்க முடியுமா?

கமலா: ஏன், அண்ணா முடியாது? இஷ்டமானால் செய்யலாம; இல்லையேல் விடலாம்; ஏன் செய்யவில்லை யென்று யார் யாரைக் கேட்பது? புருஷன் மனைவியிலே தங்கியிருக்கவில்லை: மனைவி புருஷனிலே தங்கியிருக்கவில்லை.

பத்ம: சீதனம் முயற்சியில்லாத பெண்ணா யிருந்தால்?

கமலா: அப்படியிருந்தால் மனைவி புருஷனைத்தானே தஞ்சமென்றெண்ணி அவன் பொருட்டுத் தானும் வாழ வேண்டியவளாவள், அவ்வாறு வாழ்தலினாலே கணவன் மனைவிக்கிடையிற் பரஸ்பரம் மெய்யன்புண்டாகும்; கணவன் மனைவியின் சீதனத்தை யிட்டும், மனைவி கணவனுடைய உத்தியோகம் செல்வஞ் செல்வாக்கு என்னுமிவைகளை யிட்டும் ஒருவர்மீதொருவர் கொள்ளுமன்பு வியாபார முறையான அன்பாகவிருக்குமே யொழிய நிசமான அன்பாகவிருக்கமாட்டாதண்ணா; பணம் பண்டம் சீதனம் படைத்த பெண்களுள்ளே, கல்வியறிவொழுக்கம் உயர்குடிப்பிறப்பு தெய்வ நம்பிக்கை யென்னுமிவைகளுடைய சிலரினுஞ் சிலரொழிய, ஏனைய பெண்களுட் பெரும்பாலார் தம்மிடத்துள்ள பணச் செருக்கினால், பொருட் பெருமையால், கல்வித் திறமையினால், இயல்பாகவுள்ள மௌட்டிகத்தினால், தம் நாயகனைக்காட்டிலும தாம் ஏதோ விசேஷமென்று நினைந்து, அவனை அவமதித்துப் புறக்கணித்துத் தாம் நினைத்தபடி நடக்கத் தலைப்படுகிறார்கள்; தம்மைத் தாமே புகழுகின்றார்கள்; மாமன் மாமியர் சுற்றத்தார் பெரியாரை மதிக்கின்றிலர்; வந்த விருந்தை உபசரிக்கின்றிலர்; யாரும் யாசகர் தம் வீடு தேடிப் பிச்சைக்கு வந்தால், அவருக்கு ஏதும் ஈயாதுவிடுதலோடுமாத்திரமிருந்துவிடாது, வந்த யாசகரை என்னிவிடுகின்றனர்; அண்ணா, "ஈதலரிதெனினும் இன் சொலினும் நல்கூர்தல் — ஓகோ! கொடிது! கொடிதம்மா!" என்றபடி இரக்க வந்தவர்க்கு ஈதற்கு நம்மிடத்தில் ஏதும் இல்லையானாலும் இன் சொல் இக்கும் பஞ்சப்படலாமா? ஆனால், இப்படியான பெண்கள் இவற்றைச் சிந்திக்கமாட்டார்கள்; மேலும் கொடுக்குங் குணம் ஒருவரிடத்து இயல்பாகவே யிருத்தல் வேண்டுமேயொழிய, அது இடையில் வரக்கூடியதல்ல; இது பற்றியே எங்கள் மூதாட்டியும் "நடையும் நடைப் பழக்கம், நட்புந்தயையுங் கொடையும் பிறவிக்குணம்" என்று பாடியிருக்கிறார்.

"என்னைப் பார்!
என் அழகைப் பார்"

"மேலும், அண்ணா, கல்வி கற்ற பெண், கல்வியறிவுள்ள கன்னிகை நாகரிகமுள்ள மகள் இப்படியான பெண்களை ஏதேதோ சொல்லிப் பெரிதும் பாராட்டுகிறீர்கள்; கல்வியென்றாற், எந்தக் கல்வியண்ணா? தொழிலுக்காகிய பிழைப்புக்காகிய கல்வியல்ல, அந்நிய மொழிக் கல்வியல்ல, எங்கள் பழைய ஆசாரங்கள அனுட்டானங்கள், தமிழ் மகளுக்குரிய ஒழுக்கங்கள முதலியவற்றைவிட்டு, தானும் ஒரு "அழகுராணி"யாக வரவேண்டுமென்று ஆசைகொண்டு "என்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## ரேடியோ

### ❋ இசைத்தட்டு

**திருச்சி புதன் ஆகஸ்ட் 8**

காலை 7 10 தோரமபம் 7 15 தமிழில் செய்தி 7 30 உடையாள்புரம் ஸ்ரீ கல்யாணராமய்யர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 கலைத்தாரப்பள்ளிகளுக்கு 1 சம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல்* 2 தமிழில்செய்தி 2 10 டெல்லி ரேடியோ வாத்ய கோஷ்டி* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 ரத்னபாய் காகராஜன் வீணை 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்செல்வம் 7 45 காங்கு வருஷ சுதந்திரம் எம் பக்தவத்சலம் —பேச்சு 8 திருத்தக்காரர் நாடகம் 8 15 ரத்னபாய் காகராஜன் வீணை 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 உடையாள்புரம் ஸ்ரீ கல்யாணராமய்யர் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் ஆக 9**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே வி தியாகராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உயர்தரப் பள்ளிகளுக்கு 1 ஓர் இரவு* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 கும்பகோணம் சகோதரர்கள்* 2 தமிழில் செய்தி 2 10 பயிற்சி டார்ஜி விதார் வாத்யகோஷ்டியுடன்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 கிளாரினெட், புல்லாங்குழல் ஆ இ ரே வித்வான்கள் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 கும்மிப் பாடல்கள் 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 திரைகானம்* 8 புதுமலர் அ கி செட்டியார் —பேச்சு 8 15 ராகம், தானம், பல்லவி குன்னக்குடி வெங்கடராமய்யர் பாட்டு ஆர் கே வெங்கடராம சாஸ்திரி வயலின் கோயமுத்தூர் என். ராமசாமி மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கே வி தியாகராஜன் பாட்டு 10 முடிவு.


## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணத்திலுள்ள கீழ்க்காட்டப்படும் உணவுக்கட்டுப்பாட்டு நிலையத்திலும், கிருஷிக விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்திலுமுள்ள மூவாயிரத்து நூற்றுப் பதின்மூன்றுபுசல் ஒன்பது கொத்து (3113—புசல, 09-கொத்து) நெல்லின் ஒரு பகுதி அல்லது முழுவதையும் வேண்டுபவர்களாகிய இலங்கை வாசிகளிடமிருந்து டெண்டர் போட் தலைவர் 1951-ம் ஆண்டு ஆவணி மாதம் 21ந் திகதி (21-8-51) செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்வார்.

| | புசல் | கொத்து |
|---|---|---|
| 1 உணவுக் கட்டுப்பாட்டு நிலையம் யாழ்ப்பாணம் | 2906 | 04 |
| 2 வலிமேற்கு கிருஷிக விளைபொருள்உற்பத்திவிற்பனைச்சங்கம், சங்கானை | 207 | 05 |
| மொத்தம் | 3113 | 09 |

2 இலங்கையிலுள்ள ஏதுக் கச்சேரியிலாவது ஐம்பது ரூபாய் (ரூபாய் 50/-) கட்டிக் கச்சேரிப் பற்றுச் சீட்டைக் காட்டி வடமாகாண ஏசண்டரிடம் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் 1951ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ந் திகதி (6-8 51) திங்கட்கிழமை மத்தியான 12 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம்.

விலைவிபரங்களை வடமாகாண ஏசண்டரிடம் அறியலாம்.

ஒப்பம் வ. ஆர். மைகலேயிசர்
யாழ்ப்பாண ஏசண்டருக்காக

கச்சேரி
யாழ்ப்பாணம், 24—7—51.
G 22 7, 10-8-51


## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்



நாளை (8—8—51) புதன்கிழமை மகோற்சவ ஆரம்பம்

## : வானவில் :

○ கலாமந்திரன் ○

○ காசி நகரசங்க அதிகாரிகள் சென்றவாரங் கூடிய ஒரு கூட்டத்தில் அங்குக் கடமையாற்றும் விசாரணை யுத்தியோகத்தர் (கமிஷனர்) தங்களுடைய தீர்மானப்படியே நடக்கவேண்டுமெனவும் அவருடைய கடமைகள் இன்னின்னவெனவும் அவருக்குத் தெரிவித்திருக்கின்றார்களாம்.

● பரகாயப்பிரவேசம், அல்லது கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்னுமொரு நுண்ணியகலை முற்காலத்திலே யிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருமந்திரத்தை யருளிச் செய்த திருமூலநாயனாரும் ஒரு இடைமகனுடைய உடம்பிற் புகுந்தே பின் மகாயோகியானாரென்று பெரிய புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; "மற்றொரு சரீரத்தினுட் புகுதலாம்" என்று தாயுமான சுவாமிகளும் பாடியுள்ளார்; இக்காலத்தில் இதனை எவரும் தேர்ந்தறிந்தாகப் புலப்படவில்லை; ஆனால் இப்பொழுது ஒரு சங்கம் இன்னொரு சபையின் பிராண சக்தியைக் கவர்ந்துவிட்டு அதன் கூட்டுக்குள் தான் புக முயற்சி செய்கின்றதாம்; இது உருக்கலையாகுமோ, ஆகாதோ காணறியேன்.

○ கொழும்பு நகரிலுள்ள ஆரினர் கலாசாலைகள் மிகவும் அசுத்தத்தோடு கூடியனவாகக் காணப்படுகின்றனவாம். சுகாதாரப்பகுதியதிகாரிகள் வைத்தியப்பகுதியார் குறித்த வித்தியாசாலைகளைச் சுத்தமான முறையில் வைத்துப்பேணவேண்டுமென்று அங்குள்ள ஆரினர் கலாசாலைகளின் தலைமையாசிரியருக்கும் ஏனைய உபாத்தியாயர்கட்கும் பன்முறை இடித்துரைத்தாலும், இவர்கள் சொல்வதை அவர்கள் கேட்கின்றிலராம். பாடசாலைப் பிள்ளைகளின் விளையாட்டு முன்றிலும் பலவகையான அழுக்குகள் நிறைந்து காணப்படுகின்றதாம்; இப்படியான அழுக்கோடுகூடிய இடத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்கு மத்தியான உணவுகொடுப்பதும் சுகாதாரத்திற்கு மாறுகுமென்று டக்டர்மார் தெரிவிக்கின்றார்களாம்; பன்முறை சொல்லவும் எச்சரிக்கவும் உபாத்தியாயர்கள் கேளாமையினால், இருக்குமையினால், சுகாதாரப்பகுதியார் இப்பொழுது குறித்த ஆரினர் கலாசாலைகளிலுள்ள தலைமையாசிரியர்கட்கு மாறாக வழக்குத் தொடரப் போகிறார்களாம்; சுத்தத்தைத் தாமும் பேணிப் பிள்ளைகளையும்பேணச் செய்ய வேண்டிய கடப்பாடு பூண்ட இந்த உபாத்தியாயர்களின் செயல், வேலி பயிரை மேய்ந்த தலைப்பட்டவாறுகவல்லவா இருக்கிறது!

○ பசறையில் வசிக்கும் சிறிவர்த்தன என்னும் ஒரு சிங்கள சுயம்பாகிக்கு, காலி ஜிம்கானாக் குதிரைப்பந்தயத்தில் இரண்டுலட்சம் ரூபா அதிர்ஷ்ட வெற்றிப் பரிசு கிடைத்ததாம்: யாரோ ஒரு பத்திரிகைப் பிரதிநிதி "இனி, நீர் சமையற் தொழிலை விடுத்துக் காணிபூமி வாங்கிப் பெரிய வீடுகட்டி அதில் வசித்துக்கொண்டு மோட்டார் கார் வைத்து ஓடி இடாம்பீக வாழ்வை வாழலாகுமே" என்று கேட்டபோது, "அவையொன்றும் எனக்கு வேண்டாம்; நான் இந்தத் தொழிலிலேயே இப்படியேயிருக்க விரும்புகிறேன்" என்று சிறிவர்த்தன பதில் சொன்னாராம். "பெருஞ் சீதனத்தோடு ஒரு சிறந்த கன்னிகையைக் கல்யாணஞ் செய்து கொள்ளவும் விருப்பமில்லையா" என்று கேட்டபோது, "இப்போதைக்கு அதுவும் வேண்டாம்" என்று சிறிவர்த்தன பதில் சொன்னாராம். சிறிவர்த்தனவின் வயசு 25.

○ மொறட்டுவாவிலுள்ள ஸ்ரீலங்கா பௌத்த சங்கத்தாரின் வருடாந்தக் கூட்டம், சென்றவாரம் மேற்படி சங்கத்தாருக்குரிய மண்டபத்தில் நடைபெற்றதாம். குறித்த சங்கத்தின் தலைவராகிய திரு. T. அமரசூரிய என்பவர் பேசும்போது "அரசியல் விவகாரங்களிலே தலையிட்டவர்கள் சிலர், பௌத்த சமயத்தை அரசாங்க சமயமாக்க வேண்டுமெனவும், அரசினர் பௌத்தசமயத்திற்கு ஆதரவுசெய்ய வேண்டுமெனவுஞ் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்; எங்கள் உத்தமமான பௌத்த மார்க்கத்திற்கு எவ்வகையான அரசினர் உதவியும் வேண்டாம்; அரசினர் உதவியின்றிப் பௌத்த மார்க்கத்தைச் சுயாதீனத்துடன் நாம அநுஷ்டிக்க முடியும்; அரசியல் விஷயங்களிலே தலையிட்டவர்களும் பௌத்த சமயத்தை முறைப்படி அநுட்டித்தாற் போதும்" என்றெடுத்துக் கூறினாராம்; பௌத்த மார்க்கத்திற்குப் பௌத்த அரசினருதவி வேண்டாமென்று அச் சமயத்தவர்கள் சொல்ல, எங்கள் சைவசமயத்திற்கு அரசினருதவி அவசியகம் வேண்டுமென்று சைவபக்கலின்ன விருப்போர் சிற் சிலர் சாதிக்கின்றனர்!

## ஊரெழு

இரண்டு மாசங்களாக மழையில்லாததால் ஊரிற் சனங்கள் வெய்யிலகோரத்தினால் மிகவும் கஷ்டமடைகின்றனர். கடுங்காற்று வீசி வாழைகளை முறித்தது தோட்டக்காரர்களுக்கு கஷ்டத்தை விளைவிக்கிறது. செறறியில் வியர்வை சிந்த இராபகலாகப் பாடுபடும் மக்களும் நீர்ப்பாய்ச்சல் முறையின்மையால் பெருவல்லைதப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு நீர்ப்பாய்ச்சல் ஒழுங்கு செய்வதற்கென்று பொக்கணை என்னுமிடத்திலுள்ள பாமா வென்னும் வற்றாக் கிணற்றிலுள்ள தண்ணீர் வெவ்வளவென்றும் எவ்வகையான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றறிவதற்காகக் குத்திரமிட்டு அரசாங்கத்தார் நீர்ப்பாய்ச்சிப் பார்த்தும் பல மாசங்கள் சென்றுவிட்டன. அதிக முயற்சி செய்து அரசாங்கத்தார் இவ்விஷயத்தை நிறைவேற்றி வைத்தால், கிருஷிகப்பகுதி மந்திரியார் இந்த ஊரவர்களுக்குச் செய்யுமோர் பேருதவியாகும்.

ஊரில் களவுகளும் சண்டை பிணக்குக்களும் இடையிடையே தோன்றுகின்றன. இரவில் காணுதல் வாழைகளை வெட்டுகிற முறையும் தலைப்பட்டுத் தலைகாட்டியிருக்கிறது. ஊர்த்தலைமைக்காரனும் கூடிய கவனமெடுத்தால் ஊரவர்களுக்கு நன்மையாகும்.

இத்தமாதந்தொடக்கம் கல்வி கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் "பாடசாலை வசதிச் சம்பளம்" சேர்க்க வேண்டுமென்றும் அத்தொகை மாதமொன்றுக்கு ரூபாய் காலென்றும் சுற்றுநிருபமொன்று அயலூர்க் கல்லூரியிலிருந்து பெற்றோர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இலவசக் கல்வியென்றிருந்த பெற்றோர்களும் இதுவுமொரு செலவு வந்திருக்கிறதெனக் கிலேசமடைகிறார்கள்.

— கடித

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத்தொடர்ச்சி

ளைப் பார்! என்னழகைப் பார்!" என்று தன்னை ஆபாசமான முறையில் உடுத்திக்கொண்டு, தான் அழகியோ அல்லவோ என்று நிர்க்கமாக அறியும்படி பல ஆடவர் முன்னிலையில் அவர்களுடைய நயவை பாசித்து நிற்றற்கேதுவாகிய விபரீத ஆங்கிலக் கல்வியையல்ல, அண்ணா, தமிழ்ப்பெண்ணாய்ப் பிறந்தவள் தனது தாய்மொழியாகிய தமிழைநிரம்பக்கற்க வேண்டும்; மூதுரை முதலிய நீதிநூல்களைக் கற்றல் வேண்டும்; தன் சமய நூல்களைக் கற்க வேண்டும்; கற்க இயலாதவற்றை நல்லார் பெரியாரிடத்துக் கேட்டறிய வேண்டும்; தம்மூதாட்டியர் இல்லறம் நடாத்திய முறையைப் பார்த்துப் பயில வேண்டும்; இப்படிப் பட்ட பெண்களே இல்லறத்திற்கு இசைந்தவராவாரண்ணா" என்று ஒருவாறு கூறிமுடித்தாள் கமலாட்சி. "அப்படியானால், ஆங்கிலக் கல்வி பெண்கட்கு வேண்டாமென்று தங்காய் சொல்லுகிறாய்" என்று பத்மநாதன் வினவினான். (வரும்.)

# மகளிர் மன்றம்

II

## அறிவு வாழ்வுக் கொளியைக் கொடுக்கும்

## அறியாமை இருளில் வீழ்த்தும்

பதினறுவது வயதின் பின் பெண்கள் உயர்தரக் கல்வியைக் கற்பவராவது அல்லது வேறு எந்தத் துறையிலும், தேர்ச்சி பெறுபவராவது முயலலாம். ஆயின் பட்டதாரியாகக் கலாசாலைப் பட்டமொன்றைப் பெற்றுவிட்டால் அது உண்மைக் கல்வியாகாது. பட்டம் பெறுவது கடினமான தொழிலன்று. ஆனல் பெண்கள் முதலில் உள்ளத்தைப் பண்படுத்துங் கல்வியையே கற்க வேண்டும். உள்ளப் பண்பே ஒவ்வொரு பெண்ணுக்கும் சிறந்த அணிகலனுகும். உள்ளப் பண்பை வளர்க்கக்கூடிய திருக்குறள் முதலிய நூல்களை ஒவ்வொரு பெண்ணும் ஆராக்கற்றிருத்தல் வேண்டும். அதுடன் சமயக் கல்வியும் அவசியமாகும்.

இனி ஒவ்வொரு பெண்ணும் வீட்டுப்பணிகளைச் சிறந்த முறைகளிற் செய்வதற்கும், சித்தைபூண்டு கற்றுக்கொள்ளல் வேண்டும். சோயனுசாகிதிகள், சில மருத்துவ முறைகள், சமயோசித சிகிச்சைகள், உடல்நூல், உளநூல் முதலியவற்றைகள் அறிந்திருந்தால் வீட்டில் வரும் பல துன்பங்களெல்லாவற்றையும், பெண்கள் நீக்கிவிட முடியும். இவற்றுடன் சமுதாய அமைப்பைப் பற்றியும், அங்கு காணப்படும் கொள்கைகளையும் அறிந்து கற்றுல் நாட்டிற்கு அவர்கள் உதவி செய்யலாம்.

இவ்வறிவுகள் மாத்திரம் பெறுவதல்லாமல் வீட்டில் ஓய்வு நேரங்களை கவ்வழியிற் கழிதற்குரிய சாதனங்களையும் பெண்கள் கையாள வேண்டும். பூந்தோட்டமோ அல்லது காய்கறித் தோட்டமோ உண்டாக்கல், அவற்றை மேற்பார்வை செய்தலால் இல்லையேல், கிழியல் முதலியன தைத்தல், வீட்டைச் சுத்தப்படுத்தி அலங்கரித்தல் இவை போன்ற வேறு சிறு தொழில்களையும் பெண்கள் ஓய்வு நேரங்களிற் செய்தல் வேண்டும்.

மேற்கூறியவற்றை ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருக்கவேண்டுமென்று கூறியதால், பெண்கள் இவைகளை மாத்திரம் கற்கத் தகுதியுள்ளவர் பிறவற்றைக் கற்கத் தகுதியற்றவர்கள் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து விடக்கூடாது. உயர்தரக் கல்வியைக் கற்க விரும்பும் பெண்களும் கலாசாலைக்கோ அன்றிப்பிறநாடுகளுக்கோ சென்றுகல்வி பெறும் உரிமையும் உடையவர்கள். கல்வி கற்க விரும்பும் ஒரு பெண்ணை அவள் விருப்பத்திற்கு மாருக மறித்து வைப்பதால் அவள் வாழ்க்கை முழுவதுமே பாழாய்விடும் என்பதைப் பெற்ருேர் மறந்துவிடக் கூடாது.

எமது நாட்டிடைக் காணப்படும் ஒரு கொடிய வழக்கத்தை இக்கிலியில காம எடுத்துக் கூறுதிருக்க முடியாது. பெண்கள் சிறிது ஆங்கிலமும் தமிழும் கற்றவுடன் பெற்ருேர் அவர்களை வீட்டில் மறித்துச் சிறைவைத்து விடுகிருர்கள். வீட்டில் மறித்தலும் விவாகமாகும்வரை பெண்கள் பிரயோசனமற்ற வாழ்க்கையையே நடத்துகிருர்கள். இப்பெண்கள் பலர் சோம்பி வீண்கதை கதைப்பதிலும், பகல் முழுவதும் சோம்பலாயிருந்தும் சித்திரை கொள்வதிலுமே காலத்தைக் கழிக்கின்றனர். சிறு வயதிலேயே வீட்டில் நின்றுவிடுவதால் பல பெண்களின் உள்ளம் விசாலமடைவதில்லை. தங்களுக்கும் தங்கள் ஆண் சகோதரர்களுக்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பெண் மனவருத்தமடையவுங்கூடும்.

உளளத்தை ஒரு நிலையில நிறுத்தி வைப்பதற்கு வேலை அவசியமாகும். வேலையின்றி வீண்நேரம் கழிப்பவர்களினுள்ளம் ஒரு நிலையில்லாது. அலைந்து திரியும் உளத்தைப் பின்னர் ஒருவழியில் நிறுத்துவது மிகவும் கடினம். இந்த உண்மையை ஒவ்வொரு பெண்ணும் அறிந்து தங்கள் வாழ்நாளை வீணாக்காது நல்வழியில மனத்தைச் செலுத்துவதே சிறந்தது.

அறிவின் வலிமையே வலிமை. உயர் அறிவுள்ள மக்களினத்தை நல்வழியில் அழைத்துச் செல்லும் ஞானஒளியாக விளங்குவாள். தன் அறிவு புத்திக் கூர்மை முதலியவற்றுல் இவள் வீட்டுக்கணிகலனுகவும், பெற்ருேரின் தவச் செல்வியாகவும், கணவனின் உற்ற துணைவியாகவும், கற்றபெண் அமைவாள்.

கல்வியறிவற்ற பெண்ணே வீட்டுக்குப் பாரமாக இருப்பதுமன்றித் தன அறியாமையால் தன் வாழ்க்கையையுஞ் சுவையற்றதாகச்செய்து கொள்வாள். வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்கு ஒவ்வொரு பெண்ணும், உள்ளொளி பெற்றிருக்க வேண்டும். ஆகையால், ஒவ்வொரு பெண்ணும் தனக்குகந்த கல்வி முறையை உணர்ந்து கற்று உயர் நிலகனளாகவேண்டும். இதனுலேயே பெண்ணுலகம் முன்னேற முடியும்.

இல EB/A.

## இலங்கையின் தேசீயச் சின்னங்கள்,

பாடற், வையவ உடைகள், ஏனைய உடைகள்பற்றிய கொமிஷன்.

இலங்கையின் தேசீயச் சின்னங்கள், பாடற் என்பவற்றுக்கான சிறந்தமாதிரிப் படத்துக்கு ரொக்கப் பரிசு ஐந்நூறு ரூபா (ரூ. 500/=) வழங்குவதை அறிவித்தும், தேசீயச் சின்னங்கள், பாடற், வையவ உடைகள், ஏனைய உடைகள் என்பவற்றைபிட்ட கருத்துக்களையும், யோசனைகளையும் வரவழைத்தும் 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் திகதியிடப்பட்டு 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் திகதி வெளியான அரசாங்க கெஸெற் பத்திரிகையிலும் 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம், 9-ம், 10-ந் திகதிகளில் வெளிவந்த புதினப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட இரண்டு அறிவித்தல்களைக் குறித்து இத்தால் அறிவிப்பதாவது:

மாதிரிப்படத்தை (மூன்று பிரதிகள் அனுக்கவேண்டும்) யும், கருத்துக்களையும், யோசனைகளையும் (இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்) சமர்ப்பித்தற்கான கடைசித் தினம் 1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ந் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது என்பதாம்.

ஏ. எஸ். கோமேஹாபல்-விக்கிரம,
கொமிஷனின் காரியதரிசி.

உள்நாட்டு விவகார, கிராமாபிவிருத்தி மந்திரி காரியாலயம்,
தபால் பெட்டி 552,
கொழும்பு. 7. 1951-ம் ஆண்டு
ஜூலை மாதம் 27-ந் திகதி.

G 24 7—8—51.

கருங்காலி காரைநகர்

## சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

சைவ அன்பர்கள் ஆலயகறிதாமூது சாலவும் கன்மையடைய கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் 10—8—51 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் சைவப்பிரசாரகர் ஸ்ரீ வே. சங்கரப்பிள்ளை அவர்கள் "சைவ இளைஞர் கடமை" என்னும் விஷயத்தில் பிரசங்கஞ் செய்வார்கள்.

சுபம்.

காரைநகர்
3-8-51.

இ. நாகலிங்கம்
அத்தியட்சகர்

M 65 7—8—51.

போக்குவரத்து

## அறிவித்தல்

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருட மகோற்சவம் - 1951.

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி தொடக்கம், செப்டெம்பர் மாதம் 2-ந் தேதி முடிய எல்லவகையான வண்டிகளும் கீழ்க் காட்டப்படும் தெருவீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந்தெருவில் ஆனைப்பந்திச் சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்.

(ஆ) பண்டாரக்குளத்து ஒழுங்கைக்கும் பிராமணக்கட்டுக்குள ஒழுங்கைக்கும் இடையேயுள்ள கோவிலின் மேற்கு வீதி

2. சமயோசிதமாக மாற்றப் படும் தெருக்களின் விபரம்.

குறித்த காலத்திலே வண்டிகள் ரதங்களைச் செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள்மூலம் செலுத்துவார்களாக.

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய்மார்க்கம போக்குவரவு செய்வோர் நாவலர் தெருவாலும், நல்லூர்க் குறுக்குத் தெருவாலும் வண்டி ரதங்களைச் செலுத்துக.

(ஆ) அரசடித்தெருமூலம் கோப்பாய் மார்க்கம் செல்லுவோர "உடையன்" தெரு நாவலர்தெரு, நல்லூர்க் குறுக்குத் தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக.

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் ரதங்கள்மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும் ரதங்களையும் கொண்டுபோய் நிலே ஒதுக்கி விடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(அ) அரசடித் தெரு மூலமாகக் குறித்த கோயிலுக்குச் செல்லும வண்டிகள் ரதங்கள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப்படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயிற் தெரு வீதியால்வரும் வண்டிகள் சைலாய பிள்ளையார் கோவில நிலத்தில் விடலாம்.

(இ) கோப்பாய் மார்க்கமாக வரும் வண்டிகள் ரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடலாம்.

A. C. பர்னுக்தோ
வடமாகாண பொலிஸ்
தலைவர்.

யாழ்ப்பாணம்
பொலிஸ் தானம்
26-7-51.

M 61 31—7—51, 7—8—51.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு (1) காலம் சென்ற நாகமுத்து கணபதிப்பிள்ளை

வட்டுக்கோட்டை மேற்கு (1) கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி தத்துவகாறன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1068த்த் துவவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி 1, 2, 3, 4 துண்டுக்காணிகளை 1951-ம் ஆண்டு ஆவணிமாசம் 25-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் (1) 3-30 (2) 4 (3) 4-30 (4) 5 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

(1) வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு இறை கூவளைவிளைப்பரப்பு 11½ கல்வீடுகளும் கிணற்றில அரைப்பங்கும வான்பயிர் செய்பயிர்களும் எல்லைகிழக்கு நாகமுத்து குணரத்தினத்துக்கும் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பிக்குமுரிய ஆதனங்களும் ஒழுங்கையும், வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு நாகமுத்து குணரத்தினத்துக்குரிய ஆதனம். இதடங்கலிலே சொரியலாய் ½ பாகு விற்கப்படும்.

(2) வட்டுக்கோட்டை மேற்கு இறை கற்கலை செற்பரப்பு 11 எல்லை கிழக்கும் தெற்கும் காலம் சென்ற வயிரவநாதர் பெண் தங்கமுத்துவின் உருமைக்காறர்களின் ஆதனங்கள். வடக்கு வாய்க்கால் மேற்கு குளமும் வாய்க்காலும் இதடங்கலில் சொரியலாய் ½ விற்கப்படும்.

(3) வட்டுக்கோட்டை மேற்கு இறை புதுவயல் செற்பரப்பு 9 எல்லை கிழக்கு நாகமுத்து குணரத்தினத்துக்கும் பெண் செல்லம்மாவுக்கும் விசுவர் கைம்பெண் பறுபதத்துக்குமுரியஆதனங்கள். வடக்கு விசுவர் கைம்பெண் பறுபதத்துக்கும் கணபதியார் கதிரவேலுவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு வயிரமுத்து செல்வத்துரைக்கும் காலம்சென்ற அம்பலவாணர் கிருஷ்ணரின் உருமைக்காறர்களின் ஆதனங்கள். தெற்கு காலம்சென்ற அம்பலவாணர் கிருஷ்ணரின் உருமைக்காறர்களின் ஆதனமும் குணரத்தினம் பெண் செல்லம்மாவக்குமுரிய ஆதனம். கிணற்றில ⅛ பங்கும் தெற்குப் பக்கமாய் துரவை வாய்க்காலும், இதடங்கலும் விற்கப்படும்.

(4) [illegible] கோவிற்பற்று [illegible] பறையன்புலம் செற்பரப்பு 9 எல்லைகிழக்கு வாய்க்கால் வடக்கு வயிரமுத்து [illegible] பெண் தங்கத்துக்குரிய ஆதனமும் நாகலிங்கம் கைம்பெண் தங்கத்துக்குமுரிய ஆதனம். மேற்கு வயிரமுத்து [illegible]க்குமுரிய ஆதனம். தெற்கு செல்லத்தினம் பெண் புனிதவதிக்குமுரிய ஆதனம் இதடங்கலும விற்கப்படும்.

சித்தன்கேணி
2[illegible]-7-51

ந. ஆறுமுகம்
கொம்மிஷனர்.

M 66 7—8—51.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 3

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarpannai, Jaffna, on Tuesday August 9. 1951